P.R.NO: 40

நாள் : 12.07.2017

# பத்திரிக்கைசெய்தி

களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக பாபநாச வனச்சரகத்தில் உள்ள அருள்மிகு சொரிமுத்தயன்னார் ஆடி அமாவாசை திருவிழா ஜுலை 23 தேதி நடைபெறுவதை முன்னிட்டு வனம் மற்றும் வனஉயிரினபாதுகாப்பு மற்றும் பக்தர்கள் நலன் குறித்து மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் பற்றிய கலந்தாய்வுக் கூட்டம் அனைத்து சம்பந்தப்பட்டதுறை அலுவலர்களுடன் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர் திருஅ.வெங்கடேஷ், இ.வ.ப.,அவர்கள் தலைமையில் 11.07.2017 அன்று கள இயக்குநர் அலுவலகத்தில் வைத்துநடைபெற்றது. இதில் அம்பாசமுத்திரம் கோட்ட துணை இயக்குநர் திரு நா.. ஜெயராஜ்,இ.வ.ப., அம்பாசமுத்திரம் காவல்துறை துணை கண்காணிப்பாளர், திருக்கோவில் நிர்வாகட்ரஸ்டி சிங்கம்பட்டி ராஜா திரு.T.N.S.முருகதாஸ் தீர்த்தபதி, திருநெல்வேலி போக்குவரத்துதுறை பொதுமேலாளர், பாபநாசம் டிப்போகிளை மேலாளர், அம்பாசமுத்திரம் தாசில்தார், பாபநாசம் செயற்பொறியாளர் TNEB. அரும்புகள் அறக்கட்டளை இயக்குநர், திருமதி.லதாமதிவாணன், திரு.மதிவாணன், அறிவியலாளர் திருஆல்பர்ட் ராஜேந்திரன், பேராசிரியர் திருமதி.ஜுலியட் வனிதாராணி, முனைவர் செல்லத்துரை. ATREE திரு.மதிவாணன், வி.கே.புரம் நகராட்சி துப்புறவு ஆய்வாளர், செயல் அலுவலர் மணிமுத்தாறு பேரூராட்சி, செயல் அலுவலர் ஆலங்குளம் நகர பஞ்சாயத்து தீயணைப்புதுறை அலுவலர் ராஜேந்திரன் , கல்லிடைகுறிச்சி காவல் ஆய்வாளர் மற்றும் வனச்சரக அலுவலர்கள் திருஇளங்கோ, திரு. வெள்ளத்துரை, திரு. நடராஜன், திரு.கார்திக்கேயன் , திரு பரத் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு வருடமும் ஆடி அமாவாசை திருவிழாவின் போது சுமார் 1½லட்சம் பக்தர்கள் வருகைபுரிந்து 2 முதல் 3 நாட்கள் வரை வழிபடுகின்றனர். மேலும் பலர் தங்கி வழிபட்டுச் செல்கின்றனர். அவர்களுக்கு போதிய கழிப்பறை வசதிகள் இல்லாததால் சுற்றுப்புற சூழல் மற்றும் தாமிரபரணிநதி மாசுப்படுகிறது. எனவே இதை முறைப்படுத்த

சுத்தமான சுகாதாரமான முறையில் எப்பொழுதும் தண்ணீர் வசதியுடன் கூடிய மேல்நிலைத் தொட்டி ஏற்பாடு செய்து பராமரிக்க கோயில் நிர்வாகத்தை கேட்டுக் கொள்ளப்பட்டது. அதாவது கழிப்பறைகள் நவீனமுறையில் அமைக்கப்படுவதின் அவசியம் பற்றிவிவாதிக்கப்பட்டது.

பக்தர்கள் வனஉயிரினச் சட்டம் 1972ன்படி காலை 06.00 மணிமுதல் மாலை 06.00 மணிக்குள் கோவிலுக்கு வந்துசெல்லகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாலை 06.00 மணிக்கு மேல் பாபநாசம் வனப்பகுதிக்கு வரும் வாகனங்கள் அனுமதிக்கப்படமாட்டாது. மேலும் பக்தர்கள் பிளாஸ்டிக், செல்லப்பிராணிகள் மற்றும் எளிதில் தீ பிடிக்கும் பொருட்கள் கொண்டு வரதடை செய்யப்பட்டுள்ளது. அதிக எண்ணிக்கையில் இரு சக்கரவாகனங்கள் வருவதால் மாசு ஏற்படுவதை தடுக்கும் நடவடிக்கையாக இரு சக்கரவாகன பயணிகள் பாபநாச சோதனைச் சாவடியிலிருந்து பேரூந்துகளில் செல்ல கேட்டுக்கொள்ளப்படுகிறது. வேன், லாரி மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள் பக்தர்களை இறக்கி விட்டபின் வாகன நெரிசலை தவிர்க்க மீண்டும் பாபநாசம் டாணா பகுதிக்கு கீழேவந்து பார்க்கிங் செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது. தவறும் வாகனங்களுக்கு வனவிதிகளின்படி அபராதம் விதிக்கப்படும். மேலும், வனப்பகுதியில் குடில்போடவும் தடைசெய்யப்பட்டுள்ளது. இத்தடையை பின்பற்றதவறும் நபர்களுக்கும் அபராதம் விதிக்கப்படும். திருவிழாவின்போது நல்லநிலையில் ஓடும் பேரூந்துகளை அனுமதிக்கப்பட்ட நேரங்களில் இயக்கி பக்தர்களின் வழிபாட்டுக்கு வழிவகைசெய்ய திருநெல்வேலி போக்குவரத்து பொதுமேலாளர் அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஆங்காங்கேகுப்பைத் தொட்டிகள் அமைத்துகோவில் மற்றும் அதன் சுற்றுப்புற வனப்பகுதிகள் மற்றும் தாமிரபரணி நதிபகுதிளில் மாசு ஏற்படாமல் தவிர்க்கும் நடைமுறைகளை மேற்கொள்ள கோவில் நிர்வாகத்தை கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு வனத்துறை களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் அம்பாசமுத்திரம், களக்காடு, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி கோட்ட வனப்பணியாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் கிராமவனக்குழு உறுப்பினர்கள்

உள்ளடக்கிய சுமார் 200 பேர்கள் வனப்பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். பக்தர்கள் அருள்மிகு சொரிமுத்தையனார் கோவிலுக்கு வருகை புரிந்து தங்கும் நாட்களை குறைத்து ஐந்து மாவட்டங்களுக்கு குடிநீராக பயன்படும் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக தாமிரபரணி நதியை மாசுப்படுத்தாமல் வழிபட்டு செல்ல கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம். அ.வெங்கடேஷ்

தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் கள் இயக்குநர்

உண்மை நகல் உத்தரவு படி

வரைதொழில் அலுவலர்